## <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

## <u>OS.No - 150/2022</u>

Date: 10.07.2025 PW. 1 (மாரிமுத்து)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:</u>

நான் ஆசிரியராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். என்னுடைய வரவு செலவுகளுக்காக வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். என்னுடைய மற்ற வரவு செலவுகளையும் வருமான வரி கணக்கில் காட்டுகிறேன் என்றால் சரிதான். 03.05.2016-ம் தேதி பிரதிவாதிக்கு கடனாக தொகை ரூ.6,00,000/-த்தை கடனாக கொடுத்தேன் என்று வருமான வரி கணக்கில் நா ன் காட்டியுள்ளேனா என்றால் காட்டவில்லை. பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 7 வருடங்களாக தெரியும். 03.05.2016க்கு முன்பு பிரதிவாதியை எத்தனை வருடமாக எனக்கு தெரியுமா என்றால் அதற்கு 2வருடம் முன்பு பிரதிவாதியின் வீட்டில் நான் குடியிருந்ததால் அவரை தெரியும். நான் பிரதிவாதியின் வீட்டில் ஒத்திக்கு இருந்தோன அல்லாது வாடகைக்கு இருந்தேனா என்றால் வாடகைக்கு இருந்தேன். அதனால் எங்கள் வீட்டில் உள்ள அனைவரும் பிரதிவாதிக்கு பழக்கம் என்றால் சரிதான். பிரதிவாதி ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என்றால் சரிதான். பிரதிவாதி காலி இடம் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீடு கட்டுவதற்கு பிரதிவாதியின் மனைவியின் நகைகளை அடகு வைத்து வீடு கட்டிமுடித்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்து வீட்டில் தான் பிரதிவாதி குடியிருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு குடியிருந்த போது பிரதிவாதியின் மனைவியின் நகைகளை அடகு வைத்தது சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவியின் ஊர் சிங்கம்புணரி என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவி பிரதிவாதி நகைகளை அடகு வைத்தது சம்மந்தமாக பிரதிவாதியிடம் கோபித்து கொண்டு திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்பது சம்மந்தமாக எனக்கு

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.10 17:38:21 +0530

தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மனைவியின் பெயர் திலகவதி என்றால் சரிதான். நானும் என் மனைவியும் திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு சென்று நகைகளை திருப்பி தருவது சம்மந்தமாக பிரதிவாதிக்கு ஆதரவாக கால அவகாசம் கேட்டோம் என்றால் சரியல்ல. அதன் பின்பு நாங்கள் வீட்டிற்கு வந்து ஏற்கனவே வாடகைக்கு குடியிருந்த வீட்டை ஒத்திக்காக ரூ.1லட்சம் கொடுத்து பிரதிவாதியிடம் கொடுத்ததில் அதை வைத்து தான் பிரதிவாதி அவர் மனைவியின் நகைகளில் சிலவற்றை திருப்பி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் ஒத்திக்கு பிரதிவாதியிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை. அதன் பின்பு மீதமுள்ள நகைகளை திருப்பிகொடுக்குமாறு திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மீண்டும் பிரதிவாதியின் மனைவி புகார் கொடுத்த போது நான், சிவசாமி, ஆறுமுகம் ஆகியோர் பிரதிவாதியின் மனைவியிடம் பேச்சு வார்த்தை நடத்தி கூடுதலாக கால அவகாசம் கேட்டுவந்தோம் என்றால் சரியல்ல. சிவசாமி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியின் மனைவி மீதமுள்ள நகைகளை 3 மாத காலத்திற்குள் திருப்பி தருவதாக சொன்னதால் அதற்குள் பிரதிவாதியால் பணம் பிரட்ட முடியாததால் அந்த சூழலை பயன்படுத்தி நானும் எனக்கு தெரிந்த ஒக்கூர் கிராமத்தில் உள்ள செட்டியாரிடம் ரூ.6,00,000/- கடன் வாங்கி தருவதாக கூறி அதற்கு ஈடாக பிரதிவாதியின் சொத்துக்களை ஈடுகடனாக பதிந்து தருமாறு கேட்டேன் என்றும் அதன் அடிப்படையில் பிரதிவாதி 03.05.2016ல் பிரதிவாதி என்னிடம் ரூ.6,00,000/- கடன் வாங்காமலேயே நம்பிக்கையின் பெயரில் எனது பெயருக்கு ஈடுகடன் பத்திரம் பதிந்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் தான் அவர் கிரையம் வாங்கிய பத்திரத்தை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்பு பல மாதங்களாக பிரதிவாதி கடன் வாங்கி தருமாறு கேட்டும் நான் பணம் கிடைக்கவில்லை என்றும் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி தள்ளி போட்டுக் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு நான் பணம் கொடுக்காமல் ஏமாற்றி ஈடுகடன் பத்திரம் எழுதி வாங்கி கொண்டதாக பிரதிவாதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அவர்கள் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணையின் போது

நான் அதிலிருந்து தப்பிப்பதற்காக நான் கடன் கொடுத்ததை திருப்பி கேட்டேன் சிவில் வழக்கு என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் நான் அறிவிப்பு அனுப்பியது சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பிற்கு முன்பு வேறு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அதற்கு முன்பு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ.2 இரண்டாவது அறிவிப்பு ஆகும். முதலில் எந்த வழக்கறிஞரை வைத்து அறிவிப்பு அனுப்பினேன் என்றால் பெயர் ஞாபகமில்லை. நான் சுப்பிரமணியன் என்ற வழக்கறிஞரை வைத்து 24.05.2015ல் இங்கு என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு **பி.வா.சா.ஆ.1** ஆகும். மேலும் நான் முத்துக்குமார் என்ற வழக்கறிஞரை வைத்து 25.06.2019-ல் இங்கு என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு **பி.வா.சா.ஆ.2** ஆகும். மீண்டும் நான் கதிரவன் என்ற வழக்கறிஞரை வைத்து 17.03.2022 ல் இங்கு என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு **பி.வா.சா.ஆ.3** ஆகும். அதன் பின்பு தான் நான்காவது முறையாக 27.09.2022ம் தேதி இந்தவழக்கில் உள்ள வா.சா.2 அறிவிப்பை நான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் பி.வா.சா.ஆ. 1 முதல் 3 அறிவிப்புகளை பற்றி என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.1 ஈடுகடன் பத்திரம் பதியும்போது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் என் மனைவி, பிரதிவாதி மற்றும் அவரது மனைவி, சாட்சிகள் சிவசாமி மற்றும் ஆறுமுகம் ஆகியோர் இருந்தோம். சாட்சிகள் சிவசாமி, ஆறுமுகம் எனக்கு பழக்கமா அல்லது பிரதிவாதிக்கு பழக்கமானவர்களா என்றால் பிரதிவாதிக்கு பழக்கமானவர்கள். வா.சா.1 ஈடுகடன் பத்திரம் பதிவதற்கு முன்பு மேற்படி சாட்சிகள் சிவசாமி மற்றும் ஆறுமுகத்தை நான் பாத்துள்ளேனா என்றால் பிரதிவாதி அறிமுகப்படுத்தி நான் பார்த்துள்ளேன். நான் கொடுத்ததாக சொல்லும் பணம் தொகை 6 லட்சம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் மனைவியின் நகைகளை ரூ.6 லட்சத்திற்கு அடமானம் வைத்து கொடுத்தேன். எப்போது எங்கு அடமானம் வைத்து பணம் வாங்கினேன் என்றால் மானாமதுரை பாரத ஸ்டேட் வங்கியில் ஈடுகடன் பத்திரம் எழுதுவதற்கு 10 நாட்களுக்கு முன்பு அடமானம் வைத்து பணம் வாங்கினேன். யாருடைய பெயரில் என் மனைவியின் நகைகளை அடமானம் வைத்தேன் என்றால் என் பெயரில் ரூ.2 லட்சமும் என் மனைவியின் பெயரில் ரூ.4 லட்சமும் அடமானம்

வைத்தேன். என் பெயரில் எத்தனை பவுன் நகைகளை அடகு வைத்தேன் என்றும் என் மனைவியின் பெயரில் எத்தனை பவுன் நகைகளை அடகு வைத்தேன் என்றும் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பாரத ஸ்டேட் வங்கியின் அடமான ரசீதுகளை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தற்போது நான் பிரதிவாதியின் வீட்டிலேயே குடியிருக்கிறேனா என்றால் இல்லை. வேறு ஒருவருடைய வீட்டில் குடியிருக்கிறேன். இன்றைய தேதி வரை அடமான சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். ஈடுகடன் பத்திரம் பதிந்த உடன் பிரதிவாதியின் வீடு 4 Portion ஆக இருந்ததில் 3 Portion வீட்டு சாவியை நான் வாங்கி வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதன் பின்பு ஈடுகடன் பத்திரத்திற்காக கொடுக்க வேண்டிய கடன் தொகையை நான் கொடுக்காததால் தான் பிரதிவாதி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சென்று புகார் கொடுத்து விசாரித்ததன் பேரில் நான் அங்கு வைத்து மேற்படி 3 பகுதிகளின் சாவியை கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் ஆசிரியர் பணியில் இருந்து கொண்டு கந்து வட்டிக்கு பணம் கொடுத்து வந்தேன் என்றும், நிறைய ஆட்களை வைத்து மிரட்டி வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. என் மீதும் என் மனைவி மீதும் மானாமதுரை காவல்நிலையத்தில் குற்றஎண்.451/2021 என்ற எண்ணில் முதல் தகவல்அறிக்கை உள்ளது என்றால் இடம் பிரச்சனை சம்மந்தமாக முதல் தகவல்அறிக்கை உள்ளது. வசந்த நகரை சேர்ந்த ஆறுமுகம் மனைவி அமிர்தவள்ளி என்பவரும் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி அமிர்தவள்ளியிடம் இடத்தை வாங்கிக்கொண்டு ரூ.3லட்சம் பணம் கொடுக்கவில்லை என்பதால் அவர் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஈடுகடன் பத்திரத்தில் உள்ள எந்த பணமும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றும் அதனால் பிரதிவாதி எனக்கு எந்த பணமும் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. 03.05.2016ல் நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.4 மூலப்பத்திரத்தில் உள்ள சொத்து எவ்வளவு மதிப்பு பெறும் என்று எனக்கு தெரியுமா

என்றால் ரூ.10,00,000/- மதிப்பு பெறும். நான் வேண்டுமென்றே பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.10 17:38:30 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**